3

இரட்சணிய மூர்த்தி அம்மானை

OR

THE LIFE OF JESUS CHRIST

IN

TAMIL POEMS.

19 NOV 1935

BY

REV. C. D. GNANAMANI

MISSIONARY PRIEST,

SINGAPORE.

(PART I.)

(CHRIST'S BIRTH AND INFANCY.)

1935.

இரட்சணா மூர்த்தி அம்மானை

முகவுரை.

19 NOV 1935

1. பாவ உலகம்.

1. பரப்பொருளை யறியாமல், பக்திவழி தெரியாமல்,
சிறப்பான மேலுலகைச் சிந்தைதனி லெண்ணாமல்
தரை வாழ்வே மேலென்று தன்மனமே திறமென்று
பறைசாற்றி வாழ்ந்திடுறார் பலமனுட ரிவ்வுலகில்.

2. தன்சீவி யங்கெடுத்து, தன்னினத்தார் குணங்கெடுத்து
அன்னிய பசாசினது ஆளுகையி லேயமிழ்ந்து
பொன்மாதர் பொருளாசை போகத்தி லேயுழன்று
தன்னறிவுங் கொள்ளாமல் தலைவனையுந் தான்மறந்தார்.

3. மெய்யான கடவுளது மேலான ஞானத்தை
வையகத்தில் பெற்றோமென வாதம்பல செய்துகொண்டு
பொய்யான புராணங்களைப் புணைத்துப்பலப் பிரிவினையும்
செய்கையிலே தன்னயமும் தீமையெல்லாஞ் செய்து வந்தார்.

4. இன்னவரை இரட்சிக்க ஏசுபரன் வந்துதித்தார்
நன்குணத்தா ராக்கிவிட நாதனவர் தோன்றிட்டார்
ஒன்றானப் பரம்பொருளின் ஒளியருள வந்துதித்தார்
எந்நாளுஞ் சீவியத்தில் எழிலருள தோன்றிட்டார்.

5. ஒய்யார சீவியத்தை விரும்புகிற மானிடரே!
துய்யமா பெருவுலகைத் தேடிச்செல்லும் தந்தையரே!
ஐயாவே! கேளுங்கள் ஆண்டவரின் அருஞ்சரிதை
பொய்யல்ல செவிகொடுங்கள் புகழேசு பெருங்கவிதை.

2. இரட்சணா மூர்த்தி சிறப்பு.

6. தெய்வத்தின் திருவுருவாம் சீரான ஏசுபரன்
மெய்யானப் பரம்பொருளின் மொழியாவா னேசுபரன்
வையகத்தோர் பாவத்தால் வதைபட்ட பலிமிருகம்
மெய்யான ஏதேனின் வழிகாட்டும் திருவுருவம்.

7. அண்டசரா சரங்களையும் அமைத்திட்ட பரனவன்றான்
பண்டைய பக்தர்களும் பரிசித்த உறவினமாம்
என்றுந்திரு இதயங்களில் எழிலாக இருப்பவனும்
கண்டிடவே இகத்தவரும் காசினியில் வந்துதித்தான்.

8. இரட்சிக்க வந்ததனால் இகமதிலே ஏசுவென்றும்
அச்சனுட அபிசேகம் பெற்றதனால் கிறிஸ்துவென்றும்

உச்சப்பெயர் பெற்றிருந்த ஒன்றான இப்பரனை
பச்சமாகக் கொள்ளுமையா பாவிகளின் நண்பனிவர்.

9. மனுவுருவு தான்கொண்டு மண்ணவர்க் கிணையென்று
அனுதாபங் காட்டிடவே அன்றுமனு மைந்தனென்றார்
இணையற்ற தெய்வத்தின் ஏகவொளி தானென்று
மனுமக்கள் அறிந்திடவே மாபரனின் சுதனென்றார்.

10. ஏசுவுட இக்கதையை எடுத்துரைக்க ஏலுமோதான் ?
பாசமான யோவானைப் பக்தியாய்நீர் கேளுமையா
மாசற்ற மத்தேயும் மாற்குலூக்கா சொல்லுவதை
ஆசையாக அம்மானை அருவுருவில் சொல்லிடுவேன்.

3. பரி. யோசப்பின் வரலாறு.

11. மனிதராகிய நமக்கு மகத்தான மாதிரியும்
மெய்யான ரட்சிப்பை மேலாக வேதாவும்
இனிபர மண்டலத்தில் ஏகபரன் வலமிருந்த
ஏசுபரன் இகம்வந்த இனியகதை கேளுமையா.

12. நாசரேத் தூரதிலே நன்மையெதும் உண்டாமோ
நாதன்மேல் நம்பிக்கை கொள்பவரு மங்குண்டோ
நீசு யிம்மகுடம் நிதம்பெற்ற ஊரதிலே
நல்குணத்தான் யோசேப்பு நாடறிய வசித்துவந்தான்.

13. பக்தியுள்ள தாவீது பாட்டாளி வம்சத்தில்,
பரன்ஜனத்தை ஆள்வதற்கும் பொறுப்புள்ள கோத்திரத்தில்
பக்திமான் யோசேப்பும் பண்பாக வந்துதித்தான்
பரன்சுதனைக் காப்போனும் பாசமாய் வந்துதித்தான்.

14. தச்சுவேலை செய்வான் திடமான யோசேப்பு,
தலம்புகழும் உழைப்பாளி தவிதுமகன் யோசேப்பு
எத்தருக்கும் தீங்கிழையா இதயமுள யோசேப்பு
ஏகோவா வின்வரவை எதிர்பார்த்த யோசேப்பு.

15. நாசரேத் தூரதிலே நல்குணத்தாள் ஒருமாதை
நாடி மணம்புரிய நினைத்திட்டான் யோசேப்பு
பேசி பலயிடத்தில் பெண்தேடி சென்றபின்பு
புகழான மரியாளை பெண்ணாகக் குறித்திட்டான்.

16. பெண்ணான மரியாளும் புகழ்தவிது வம்சத்தாள்
பேசாது தியானிக்கும் பெரியகுண இதயத்தாள்
உன்னதப் பாடல்களை உரைத்திடுநல் கவியாவாள்
உதவிசெய முன்வருகும் உத்தமியாம் மரியம்மாள்.

2325
894

17. நிச்சய தாம்பூலம் நியமித்தார் ஒருதினத்தில்
பக்தியுள்ள பெரியோரை பரிந்ததற்கு வழைத்திட்டார்
அச்சனுட தயைநாடி அங்குள்ளோர் நலங்கோரி
இத்தினத்தில் விவாகமென இசைவாகக் குறித்திட்டார்.

4. பரி. கன்னி மரியம்மாளுக்கு தூதனின் மங்களவாக்கு பரி. லூக். 1: 26–38

18. நாசரேத் தூரதிலே நற்கன்னி மரியம்மாள்
ஈசன் அருள்பெற்று இன்புறவே வசித்துவந்தாள்
மேசியா வின்வரவை மிகவாக எதிர்பார்த்து
பேசுவாள் வல்லபரன் மகிமைகளை யெந்நாளும்.

19. தாழ்மை அன்புள்ளாள் தற்பரனைத் தியானிப்பாள்
நாளும் நாடதிலே நடப்பதெல்லாம் கவனிப்பாள்
சால ஜெபதானம் தபமெல்லாஞ் செய்திடுவாள்
கேளும் பெரியோரே! கர்த்தனுட கிருபைபெற்ருள்.

20. நன்ருய் யொருதினத்தில் நீண்ட செபஞ் செய்ய
சென்ருள் அறைக்குள்ளே தனித்தியானஞ் செய்யத்தான்
பண்டு பரன்கொடுத்த பலவாக்கு களைச்சொல்லி
இன்று ஜனமெமக்கு இதம்புரியு மென்றுரைத்தாள்.

21. இவ்வாறு அறைக்குள்ளே செபஞ்செய்து இருக்கையிலே
எகோவா வின்தூதன் எழுந்திட்டான் அவள்முன்னே
இவ்வான தூதனுட இதபெயர்தான் காபிரியேல்
இமயவரில் பிரதான இடம்பெற்ருே ஞமறிவீர்.

22. காபிரியேல் மரியாளைக் கண்டுசொல்வான் மங்களமாய்
கர்த்தனுட கிருபைபெற்ற கன்னிகையே வாழ்ந்திடுவீர்
தேவனவர் உம்முடனே திகழாக இருக்கின்ருர்
தேசப்பெண் சகலரிலும் தீர்க்கப்புகழ் உமக்கேயாம்.

23. மரியாளும் தூதனுட மங்களத்தைக் கேட்டுமிக
மனக்கலக்கங் கொண்டுவவள் மாநடுக்கத் தோடுநின்று
அறியேனே இந்தபெரு அதிசய தூதன்மொழி
அத்தனே இதன்கருத்தை அடியாளுக் குரையென்ருள்.

24. சம்மனசும் அவளுடைய திகைப்புகளைக் கண்டுசொல்வான்
அம்மாநீர் பயப்பட்டு அலக்கழிய வேண்டாமே
இம்மகா தேவனுட இரக்கங்களைப் பெற்றுவிட்டீர்
இம்மானு வேலவரின் இததாயா ராகிடுவீர்.

25. கர்ப்பவதி யாகிடுவீர் கடவுளுட அருளாலே
பெற்றிடுவீர் ஓர்மகனைப் பெயர்கொடுப்பீர் இயேசுவென
மெத்தப் பெரியவராய் மேன்மைப் பரன்சுதனாய்
பக்த தாவீதின் புகழாட்சி தான்பெறுவார்.

26. யாக்கோபின் குடும்பத்தை என்றைக்கும் காத்திடவே
ஜோக்காக அரசாள சதாகால மேயிருப்பார்
ஏக்கங்கள் மிகதுலையும் இன்பச் சுகம்விளையும்
பார்ப்பீர் பரனுடைய பெருஞ்செயலை யென்றுரைத்தான்.

27. மரியாளும் கேட்டிட்டாள் மகத்தான தூதனிடம்
உரைத்திடுவீர் எவ்வாறு உண்மையிது ஆகுமையா
அறியேனே புருஷனைத்தான் அறக்கன்னி யாகும்நான்
பெறுவேனோ மக்களையும் புகழ்விளங்க சொல்லுமென்றாள்.

28. இதைக்கேட்ட சம்மனசு இன்புறவே சொல்லுகின்றான்
கதையல்ல கடவுளுட கனவாவி வரும்மும்மேல்
பதையாதீர் பரனுடைய பெருபலமும் நிழலிடுமே
இதோவும்மில் சென்மிப்பது ஈசனுட சுதனவார்.

29. கர்த்தரால் ஆகாத கருமங்களும் உண்டாமோ?
இத்தோநீர் கேளுமம்மா எலிசபேத் தும்மினத்தாள்
மெத்த வயதான இந்நாளில் கர்ப்பமாகி
இத்தோ ஆறுமாதம் இனிதாக ஆயிற்றென்றான்.

30. மரியாளும் மனங்களித்து மகத்தான தூதனிடம்
அரிவை அடியாளும் ஆண்டவனின் அடிமையாவேன்
புரிவீர் எந்தனுக்கு புகழ்மொழிபோ வென்றிடவே
மரியாதை யாயெழுந்து மறைந்திட்டான் தூதனன்று.

5. பரி. கன்னி மரியம்மாள் எலிசபேத்தை சந்தித்தல். பரி. லூக். 1: 39–56

31. தூத னுரையுணர்ந்து, தூயபரன் றனைப்பணிந்து
மாது மரியம்மாள் மகத்தாகத் தானெழுந்து
யூதா மலைநாட்டில் ஒருபதியின் சிறுவீட்டில்
சாது சகரியாவின் சகியவளை சந்தித்தாள்.

32. சாந்த எலிசிபெத்து சகரியா வுடமனைவி
வாழ்ந்த பலகாலம் மக்களற் றேயிருந்து
தாழ்ந்து பலங்குன்றி, தலைமயிரில் நரைதோன்றி
காய்ந்த காலமதில் கர்ப்பவதி யாயிருந்தாள்.

33. இச்செய்தி தானறிந்து இறைவனுட பலமுணர்ந்து
மெச்சினுள் மரியம்மாள் மெலாக எலிசபெத்தை
உசித மாய்வாழ்த்தி வுயர்பரனை மிகப்போற்றி
நிச்சயம் பரன்மொழியை நம்பிடுதல் நலமென்றாள்.

34. எலிசபேத்து இதுகேட்டு யியம்புவாள் மரியவட்கு
களித்திட்ட தென்கர்ப்பக் கனிகூட வும்மொழியால்
வலியமா பரன்கிருபை வரம்பெற்றீர் நீர்வாழ்க
தளைக்குமே வும்மகவும் தாரணியில் மிகவாழ்க.

35. ஆண்டவரின் தாயாரும் அணுகிடவே என்வீடு
நீண்டதவம் செய்தேனோ நெருங்கிடவே என்வீடு
ஊன்றவே நம்பிடுவோர் வுயர்பரனின் வாக்குகளை
மாண்பாக பெற்றிங்கு மகத்தாக வாழ்வரென்றாள்.

36. மரியாள் இதுகேட்டு மனக்களிப்போடேயெழுந்து
அரியவோர் கவிகட்டி அங்கவள் அரங்கேற்றி
தெரியாத சனங்களுக்குத் தெய்வத்தின் வழிகாட்டி
திரிதிங்கள் வரையங்கு தரித்திருந்து திரும்பிட்டாள்.

6. யோசேப்பின் மனக்கலக்கம்.

37. மரியாளை மணம் புரியும் மகத்தான யோசேப்பு
சரியான பொருளின்றி சற்றே மனங்கலங்கி
விரைவாக கல்யாணம் வைக்காது நிறுத்திவிட்டு
தரையதிலே தன்தொழிலை திறமாக நடத்தி வந்தான்.

38. காலம் இவ்வாறு கடந்துகொண்டு போயிற்று
சால மரியாளின் சனந்திகைக்க வாயிற்று
வேலை யற்றோரால் வீண்கதைகள் தோன்றிற்று
சில யோசேப்பின் செவியிலது யேறிற்று.

39. தாமதம் இனிச்செய்தால் சரியல்ல வென்றெண்ணி
மாமன் வீடடைந்தான் மணம்புரியுந் தினங்குறிக்க
சேமம் விசாரித்து சிறப்பாக விருந்துண்டு
நேம கன்னிமரி நிலமையுங் கண்டிட்டான்.

40. தெய்வ உரைப்படியே, திருவாவி செயலாலே
தையல் கன்னிமரி திருகர்ப்ப மாயிருந்தாள்
வையம் வாழ்ந்திடவே மாபரனின் சுதன்தோன்ற
செய்ய திருகன்னி சிறப்பான தலமானாள்.

41. ஐயோ இதுகண்டான் ஆழ்ந்தகுண யோசேப்பு
மெய்யை அறியாமல் மயங்கிட்டான் யோசேப்பு

வையந் தெரியாமல் வழுவற்ற மரியாளை
பைய விலக்கிடவே பன்முறையும் எண்ணிட்டான்.

42. இவ்வா றவனெண்ணி இரவதிலே ஜெபம்பண்ணி
செவ்வையாய்த் தூங்கையிலே சொப்பனமும் கண்டிட்டான்,
கௌரவ மாய்த்தூதன் கனவதிலே முன்நின்றான்
செவ்வையாய் யோசேப்பின் திகைப்பகற்ற சொல்லுகின்றான்.

43. தாவீ துடமகனே! தர்மகுண யோசேப்பே!
தேவி மரியாளில் தீதொன்றுஞ் சொல்லாதே
தெய்வ வாக்கதுபோல், திருவாவி யருளதனால்
துய்ய கர்ப்பமது திறமாக வாயிற்றென்றான்.

44. திருமகனைத் தான்பெறுவாள் தெய்வ அருளாலே
அருமையாய் நீயழைப்பாய் அம்மகனை இயேசுவென
பெருயிச ரேலவரின் பாவங்கள் தனைநீக்கி
திருகுணத்தா ராக்கிவிட தேவனவர் தோன்றிட்டார்.

45. இம்மொழி தான்பறைந்து இமயவனும் மறைந்திட்டான்
செம்மன யோசேப்பில் சந்தோஷந் தோன்றிட்டாம்
தன்மனை மரியாளின் சிறப்புகளைத் தானுணர்ந்தான்
உன்னத மாயவளை ஊறிய மணம்புரிந்தான்.

46. நாசரேத் தூரதிலே நல்மணம் நடத்திட்டார்
பாசமாய்ப் பெரியோரை பரிந்ததற்கு அழைத்திட்டார்
தேசத்தின் வளமைப்படி திகழ்மறையின் போதப்படி
யோசேப்பும் மரியாளும் உத்தமராய் வசித்துவந்தார்.

7. கிறிஸ்துவின் ஜனனம்.

47. ரோம ராஜ்யத்தின் உள்நாடு கானுனில்
நேம குடிமதிப்பு நடத்திட்ட நாட்களிலே
நாமப் பதிவுசெய்ய நல்மரியும் யோசேப்பும்
சென்மப் பதியதற்குச் சிறப்பாக வந்திட்டார்.

48. தாவி துடமகனும் தயாளகுண யோசேப்பு
தேவி மரியோடு தலைபயணஞ் செய்திட்டு
மேவு தவிதரசின் மலையூதா பதியான
தேவ பெத்லகேம் திருதலத்தி லமர்ந்திட்டார்.

49. பெத்திலைப் பதியதிலே பேணிடவே ஜனமில்லை
சத்திரஞ் சேர்ந்தாலோ ஜனநெருக்கம் இடமில்லை
கர்ப்பிணி கன்னிகைக்கு களைப்பாறத் தலமில்லை
இப்புவி நாதருக்கு இப்பதியில் இடமில்லை.

50. பக்தன் யோசேப்புப் பலவிடமும் திரிந்தலேந்து
மெத்த மாடடைந்த குகையொன்றைத் தெரிந்திட்டான்
சுத்தஞ் செய்ததனை சகியோடு வந்தங்கு
கர்த்தன் காவலிலே களிப்பாக தங்கிட்டார்.

51. மாட்டுக் கொட்டகையில் மனமொத்து வசிக்கையிலே
போற்றும் மரியவட்கு பிரசவமு மாயிற்று
மீட்குந் திருச்சுதனுர் மண்ணோரின் பவந்தீர்க்கும்
ஆட்டு மறியல்லோ அங்கன்று பிறந்திட்டார்.

52. அன்னை மரியவட்கு அங்குதவிக் காளில்லை
சின்ன பாலனுக்கு சிறப்பேது மங்கில்லை
முன்னணை மீதிலே முழக்கந்தை துணியிலே
அண்ணலுங் கிடந்திட்டார் அழுதுகொண் டழுக்கிலே.

53. அன்பே உருவாகி அகிலமெல் லாம்பரவி
முன்பு பக்தருட முழுவுள்ளத் தேயிருந்தோன்
என்பு தசையோடு இடையருட முன்னணையில்
இன்பப் பாலகனுய் இருக்கின்ருர் கண்டிடுங்கள்.

54. ஈனப் பாவிகளை ஈசன்வசம் உயிர்த்திடவே
வான மகிமைவிட்டு வள்ளலிவர் வந்திட்டார்
பூணுஞ் சிறுமையினுற் புண்ணியம் வருமென்னும்
ஞானம் பேரதிக்க நாதனவர் வந்திட்டார்.

8. இடையர் தரிசனம்.

55. மாட்டுக் கொட்டகையில் மகிமைபரன் பிறந்திட்ட
தேற்றுஞ் செய்திதனைத் திருத்தூதன் கொண்டங்கு
ஆட்டு இடையருக்கு அறிவித்த நடபடியை
கேட்டுக் களிகூறும் கிறிஸ்தவரே, அம்மானை.

56. மலைநாடு யூதாவில் மகத்தான ஒருபதியில்
பலவாடு மேய்க்கின்ற பழங்கோனுர் சிலரிருந்தார்
பழவேத மொழிகற்ருேர்; பரன்பக்தி மிகவுற்ருேர்
இசரேலின் மீட்புக்காய் என்றைக்குஞ் செபித்திடு வோர்.

57. யூதா வயல்வெளியில் ஒருநாள் இராத்தங்கி
சேதம் வராவண்ணம் சிறுமந்தை யதைக்காத்து
கூதல் தரங்காமல் கரிநெருப்புப் போட்டங்கு
வேதக் கதைசொல்லி விழித்திருந்தார் கோனரும்.

58. வெளியிலே இவ்விடையர் விழித்தன்று இருக்கை யிலே
கலிநீக்கும் விண்தூதன் காட்திலே தோன்றிட் டான்.
வலியவோர் வெளிச்சமது வீசியது விண்ணதிலே
கிழக்கோனுர் மிகப்பயந்து கூச்சலிடத் துடங்கிட் டார்.

59. பயந்திட்ட மேய்ப்பருக்கு பரன் தூதன் சொல்லு கின்றான்
பயப்பட வேண்டாமே பக்தியுளக் கோனாரே!
உயர்ந்தப் பரன்செய்தி உரைத்திடவே நான்வந் தேன்
நயந்த நாடிதற்கு நற்செய்தி நான்கொணர்ந்தேன்.

60. எல்லா ஜனத்திற்கும் எக்களிப்பை உண்டாக்கும்
நல்ல செய்திசொல நானிங்கு வந்திட்டேன்
நில்லும் பயந்திடாமல் நிமலகுண கோனாரே
சொல்லும் மொழியிற்குச் செவிகொடுங்கள் மானிடரே.

61. எகோவா வின் சனமே! இசரவே லேவுனக்கு
ஒகோ, இரட்சிப்பை உண்டாக்கும் மேசையா
வாகாகப் பிறந்திட்டார் வான் தவிது ஊரதிலே
வேகமாய்ப் போய்ப்பார்ப்பீர் விண்பரனை இன் றைக்கு.

62. கந்தைத்துணியதிலே காட்டு மாட்டகத்தே
நிந்தைக் கோலமாக நீச முன்னணையில்
தந்தை இல்லாத தெய்வக் கிறிஸ்துவையே
இந்தோ நீர்காணும் இதுவேயும் அடையாளம்.

63. தூதன் இச்செய்தி தொனித்திட்ட அச்சணமே
சோதி யுள தூதர் திரளங்கு தோன்றிட்டார்.
கீதத் தொனியோடு ககனத்தில் நடித்திடவே
தூதர் கணமங்கு தோன்றிப் பாடிட்டார்.

64. உன்னதம் இருக்கின்ற உயர்பரனுக் கேமகிமை
மண்ணதில் உண்டாச்சு மாசமா தானமதும்
என்றும் மானிடற்கு எகனுட பிரியம் வரும்
உண்டாக பரன்வந்தார் ஒன்றான ஒளிதந்தார்.

65. என்று பாடிட்டு இமயவரும் மறைந்திட்டார்.
அன்று இடையர்கள் ஆனந்தங் கொண்டிட்டார்.
நன்று பரன் மொழிபோல் நாமங்கு போய்ப்பார்ப்போம்
என்று எல்லவரும் பெத்லேப் பதிசென்றார்.

66. பெத்தலேப் பதியிலே புகழ்பாலன் கிறிஸ்தாசை
சுத்தக் கன்னிகையின் சிறுகையில் கண்டிட்டார்.
மெத்தத் தொழுததனை மேலான படைப்பாக
சுத்தப் பால்தயிரும் சுகநெய்யுந் தந்திட்டார்.

67. மாட்டகத்தில் பிறந்தவர்க்கு மகத்துவஞ் செய்திடவே,
ஆட்டிடையர் முதல்வந்தார் ஆர்ப்பாட்டஞ் செய்திடவே.
தேற்றுநல் கோனகத் தாரணியில் வந்தவரை
காட்டிலுள கோனாரே கண்டிட்டார் முதலாக.

9. கிறிஸ்துவின் விருத்தசேதனம்.

68. மண்ணோர்க்கு மாதிரியாய் மனுவாக வந்திட்ட
விண்ணோனும் யூதமறை விதிகளையும் கைக்கொண்டு
சுன்னத்தி பெற்றிட்ட செய்திதனை யிப்போது
எண்ணத்தில் நீர்கொள்ளும் இயம்புகிறேன் இக்கவியில்.

69. பிள்ளைக்கு எட்டாம்நாள் பேர்கொடுக்க வெண்ணியே
எல்லார்க்கும் யோசேப்பு இதவழைப்பு வனுப்பிட்டான்
நல்லார் பலக்கூடி நாதன் நயைபாடி
பிள்ளைக்கு ஏசுவென பேர்கொடுத்தார் நன்றாக.

70. விருத்தசே தனம்பெற்றார் விண்பரனு மன்றைக்கு
திருபரன் சபையதிலே சேர்ந்திட்டா ரிப்பாலன்
அருகடவு ளவரோடே அவ்வுடன் படிக்கைசெய்து
அறுத்தெறிந்தா ரிழிவுடலை ஆண்டவரோ டிணைந்திடவே.

71. இருதயத்தி னழுக்குகளை யெறியுமென யெம்பெருமான்
குறிப்பாகப் போதித்தார் குணங்கொள்வீ ரிதனாலே
பெருஞான முழுக்கதனை பதிலாக ஏற்படுத்தி
விருத்தசே தனமிதுதான் வியப்பாக நடத்துமென்றார்.

10. ஏசு பாலகனைப் புகழ்ந்திட்ட இருவர்.

72. மோசேயும் விதித்திட்ட முறைமைப்படி யவர்களந்த
ஆசார சுத்தியதி னருதினத்து இறுதியாக
யோசேப்பும் மரியாளும் எருசலே மாலயத்தில்
பாசமாய்ப் பணிந்துநல்ல பலிகள்தானே செலுத்தசென்றார்.

73. முதற்பிறப்பு ஆண்சிசுக்கள் முதல்வனுக்கு வுரியதல்லோ
விதித்தவிந்த ஒழுக்கம்போலே விமலனுக்கு ஏசுதன்னை
இதபடைப்பாய்க் கொடுத்துவாங்க எடுத்துச்சென்று ரப்பதிக்கு
மதவொழுக்கந் தவறாயிந்த மரியாளும் யோசேப்பும்

74. புத்திரனை ஈசனுக்குப் பிரதிஷ்டை செய்தபின்பு
சுத்தமான புறாக்கள்தன்னை செலுத்திவிட்டு பலியாயன்று
மெத்தமன களிப்பதோடு மேலோனைப் புகழ்ந்துநின்றார்
பக்தமனப் பெற்றோரும் பரனுடைய ஆலயத்தில்

75. ஆலயத்தி லிருக்கையிலே அங்குவந்தா னோர்கிழவன்
பாலகனைப் பார்த்தானந்த பக்தியுள்ள பழங்கிழவன்
சீலபரன் ஆவிபெற்ற சிமியோனு மக்கிழவன்
சாலவே இசரவேலின் சிறப்பதற்குக் காத்திருந்தோன்.

76. கர்த்தருட திருகிறிஸ்தைக் காணுவரை நீயிருப்பாய்
எத்தினமு மாலயத்தி லிருந்ததற்கு எதிர்பார்ப்பாய்
உத்தமனே என்றுதெய்வ முரைத்திட்டா ரம்மொழிபோல்
அத்தினத்தி லங்கிருந்தா னருகிழவன் சிமியோனும்.

77. புதல்வனையே ஆலயத்தில் பெற்றோருங் கொண்டுயேக
பதமான கைகளிலே பாலகனை வாங்கிக்கொண்டு
இதமான சிமியோனும் இனியவோர் கவிகட்டி
முதல்வோனைப் புகழ்ந்துவன்று முழங்கிட்டான் மிகவாக.

78. ஆண்டவனே உம்மொழிபோல் அடியேனைப் போகவிடும்
நீண்டதினம் காத்திருந்தேன் நின்மொழியும் நிறைவேற
காண்கின்றே னும்மீட்பு காசினியி லின்றைக்கு
மாண்பாகு மிசரேற்கு மற்றவர்க்கு மொளியல்லோ.

79. இவ்வாறு வாழ்த்தியே இக்கிழவன் சொல்லுகின்றான்
செவ்வையா யிருதயத்தின் சிந்தைகளை வெளிப்படுத்தி
ஒவ்வாத பலர்விழவும் உயர்குணத்தா ரெழுந்திடவும்
தவ்வாத திருப்பாலன் தலையெடுப்பா ரறிந்திடுவீர்.

80. அம்மா இங்கோகேளும் அருபாலன் றாயேநீர்
இம்மகன் ஜீவியம்மே இகத்தவர்க்கு அடையாளம்
உம்மனதி லோர்கட்கம் ஊடுருவச் சென்றுவிடும்
செம்மனத்தார் சிறப்புறவே சிலுவையிவர் வழியாகும்.

81. அக்கிழவன் மொழிகேட்டு ஆச்சரியத் தோடிருக்க
பொக்கவாய்க் கிழவியன்னாள் புகழ்ந்திட்டாள் பாலன்றன்னை
பக்தியுள விதவையங்கு பரன்நாட்டம் மிகுந்தவர்க்கு
சக்கரம்போற் சுழன்றுசொன்னாள் சீர்கிறிஸ்து சிறப்புதன்னை.

82. மீட்குங் கிறிஸ்துவந்தான், மெய்யாய் ரட்சிப்பீந்தான்
சோக்காய் இசரவேலின் சிறையதனை மீட்பானிங்கோ
தீர்க்க தரிசினானே, தெய்வ மொழிசொன்னேனே
கேட்பீர் கேட்பீரென்று குதித்துக் களித்து நின்றாள்.

11. ஞானிகள் தரிசனம்.

83. ஏரோது ராஜாவும் எருசலேம் பதியதிலே
பாராளும் அரசராக பலத்திருந்த நாட்களிலே
சீரான கீழ்நாட்டு சிறப்புள்ள ஞானிகளும்
பாராட்டும் கிறிஸ்தரசை பணிந்திடவே வந்திட்டார்.

84. எருசலேம் நகர்சென்று ஏரோதைக் கண்டன்று
பெருயூதர் ராஜாவை பணிந்திடவே வந்திட்டோம்

220867

அருவுடுவின் ஒளியாலே யவர்பிறப்பைக் கணித்திட்டோம்
மறுவிலா மன்னவன் மனையதனைக் காட்டுமென்றூர்.

85. அரசன் அதைக்கேட்டு அருகலக்கங் கொண்டிட்டான்.
பெரிய மனிதரெல்லாம் பயந்தங்கு நடுங்கிட்டார்.
பெருரோம ராஜாங்கம் பலத்திருக்க இன்றெழுந்த
அருராஜா யாரென்று ஆச்சரியங் கொண்டிட்டார்.

86. அரசனும் அழைத்திட்டான் பூஜாரி கும்பதனை
விரசாக வந்திட்டார் வேதபா ரகர்தானும்
தரையாளும் அரசனவன் தனிமையாய் அவரிடத்தே
திருகிறிஸ்து பிறப்பதனை திட்டமாகச் சொல்லு மென்றான்.

87. வேத மொழிகற்ற வேதியரும் சொல்லுகின்றூர்
ஆதம் தருகின்ற அரசனே நீர்கேளும்
பூதலம் தனையாள புகழ்கிறிஸ்து பெத்தலையில்
ஆதவம் போலெழுவார் அறிந்திடுவீர் திருமொழியை

88. தீர்க்கன் மீகாவும் திட்டமாச் சொல்லுகிறான்
பார்க்க சிறுபதியே பெத்தலை வாழ்நகரே
நோக்கில் சிறிதோநீ நிமலன்ஜனமாளுகின்ற
வாக்குக் கடவுளுட வளஜென்ம ஊரல்லோ ?

89. என்று வேதியர்கள் எடுத்துரைத்த மொழிகேட்டு
அன்று அரசனவன் ஞானியரை அழைத்தனுப்பி
நன்று நீர்சொல்லும் நாதனுடு விபரத்தை
என்று கண்டிட்டீர் எத்திசையில் தோன்றிற்று.

90. ஐயா நீர் சொல்லும் அப்பெருமான் சிறப்புகளை
மெய்யாய் யூதர்களும் மறைமொழியில் காண்கின்றூர்
வையகம் ஆளுமந்த வள்ளல் கிறிஸ்தரசன்
தொய்கின்ற பெத்தலை தொழுவத்தில் பிறப்பாராம்.

91. நீங்கள் போயின்று நிமலன்றனைக் கண்டிடுங்கள்
ஓங்கு பரனவனின் உண்மைகளை அறிந்திடுங்கள்
வாங்கள் திரும்பியிங்கு, வள்ளலைப் பணிந்திடவே
ஏங்கித் தவிக்கின்றேன் என்றவரை அனுப்பிட்டான்

92. கோனுடைய மொழிகேட்டு களிப்பாகப் போகையிலே
வானதிலே முன்கண்ட வல்லுடுவைக் கண்டிட்டார்.
ஞானிகளைக் கிறிஸ்தரசின் நல்லகத்திற் கழைத்திடவே
வான வழிகாட்டி வந்ததுவாம் விண்ணதிலே.

93. பெத்தலைப் பதியிலே புகழேசு பிள்ளையையும்
பக்தியுள தாயதையும் பணிந்திட்டார் ஞானிகளும்

சுத்தமுனைப் படைப்பாக சுவர்ணமுடன் போளதுபம்
மெத்தவாய் படைத்திட்டார் மேலான பெரியோர்கள்.

94. அத்தின இரவதிலே ஆண்டவன் தரிசனத்தில்
பக்தியுள ஞானிகட்குப் புலப்பட்டுச் சொல்லுகின்ருன்
எத்தனவன் எரோது இடமதற்குப் போகாமல்
சுத்துவழி சென்றுநீர் சென்மநா டடைந்திடுவீர்.

95. எசு இறைவனையே இன்பமாய் எற்பதற்கு
மாசு மறுவில்லா மகத்தான ஞானிகளும்
தேசந் தொலையிருந்து தேடியே வந்திட்டார்
ஈச னுடஜனமோ இன்பமுரு தொழிந்திட்டார்.

12. கிறிஸ்துவுக்கு எகிப்தின் அடைக்கலம்.

96. ஞானிகள் போனபின்பு நாதனின் தூதனந்த
வானவன் வளப்புத்தந்தை கனவதில் வந்துதோன்றி
கோனவன் பிள்ளைதன்னைக் கொல்லவே கருதுகின்ருன்
ஈனமே செய்வானந்த எரோது அரசுகண்டாய்.

97. ஞானமாய் நீயெழுந்து நற்பால னேசுவையும்
மோனமாய் இருக்குமந்த மெச்சுதா யவளுங்கொண்டு
கான்கம் பலவுந்தாண்டி கடுவழி நடந்துசென்று
ஈனமாய் முன்னிருந்த எகிப்திற்கு எகுவாயே.

98. தாமதம் செய்யவேண்டாம், தயங்காதே வழியிலெங்கும்
யாமிய மிருக்குமந்த எகிப்திற்குச் செல்வாயென்று
சாமியின் தூதன்சொல்லி சடுதியாய் மறைந்துவிட்டான்
கோமகன் யோசேப்பன்று கலக்கத்தோ டேயெழுந்தான்.

99. அத்தின இரவிற்ருனே அம்மூவர் புறப்பட்டாராம்
சக்தியில் மிகுந்தமைந்தன் தீவிர மாய்ச்சென்ருராம்
மெத்தவே தொல்லைவந்தும் மேலோனின் தயையைப்பெற்று
அத்தனே உமதுசித்தம் ஆகட்டும் என்றுசொன்னர்.

100. முன்னளில் இசரவேலை எகிப்திலே இருந்துமீட்ட
கொன்னவாய் மோசேதானும் கலைகளை கற்கவங்கு
பன்னளும் இருந்ததுபோல் பாவியை மீட்குமேசு
இன்னளில் எகிப்துநாட்டில் இருக்கவே சென்றுவிட்டார்.

101. தீர்கனும் ஒசியாவும் திருமகன் எசுதானும்
பார்க்கவே இசரலைப்போல் பரன்மகன் ஆகுமென்றும்
எக்கமாய் என்மகவை ஈனயெகிப் ததிலிருந்து
ஆக்கமாய் அழைத்தேனென்று அருபா னுரைத்தா ரென்ருன்.

102. அரசியல் அடிமையானோர் அத்தனால் மீட்புப்பெற்ற
பரன்றனை சேவைசெய்ய பலஸ்தினா வந்ததுபோல்
பரன்மகன் ஏரோதரசின் பயங்கரம் நீங்கசென்ற
புறநாடு யிருந்துவந்து புகழ்பணி செய்தாரைய்யா.

13. சிசுக்கள் சங்காரம்.

103. சாத்திரிகள் திரும்பிவர சிந்தையோடு ஏரோது,
காத்திருந்தும் ஞானிகளைக் காணாமற் போனதனால்
நேத்திரமும் மிகசிவந்து, நீதிநெறி தான்மறந்து
ஆத்திரமா யவன்செய்த அருபழியைக் கேளுமையா.

104. ஞானிகளின் வாக்கதனை நமபியதா லேமாந்த
ஈனகுண ஏரோது ஏசுவையே கொல்லவெண்ணி
சேனைகளைப் பெத்திலகேம் சிறுபதிக்கு அனுப்பியங்கு
ஊனமிலா சிசுக்களையே உயிர்ச்சேதம் செய்துவிட்டான்.

105. இருவயதுக் குட்பட்ட யெல்லாவாண் பிள்ளைகளும்
அருஉயிர் துறந்திட்டார் அரசனின் ஆக்கினையால்.
பெருவழு குரல்போட்டார் பெத்திலேயின் பெற்றோரும்
அருசிசுக்கள் மரித்திட்டார் ஆண்டவருக் காதவன்று.

106. தீர்க்கன் எரேமியா திட்டமாய்ச் சொல்வதுபோல்
கூக்குரல் போடுகிறாள் குணராகேல் சிசுவிழந்து,
ராக்காலம் கேட்டிடுது ராமாவில் பெருகூச்சல்
பார்க்கவே பதைக்கின்றார் பரன்பிறப்பில் நடந்ததிதை.

107. ராமா கல்லறையில் புதைந்திருந்த ராகேலும்
ஆமா மழுதாளாம் தன்மக்கள் சிறைபோக,
சீமா னேசுபரன் சிறையெகிப்திற் கேகிடவே
பாமரப் பெத்திலேயின் பெற்றோரு மழுகின்றார்.

108. உலகத்தை ரட்சிக்க வுயிர்விட்டா ரெம்பெருமான்
பலகட்டம் பட்டிட்டார் பாவிகளை ஈடேற்ற
உலகத்தி லுள்ளவரு மென்செய்தார் ஈடாக?
சிலசிசுக்கள் தம்முதிரம் சிந்திட்டா ரின்பாக.

14. இயேசு நாசரேத்தூரில் செய்த ஜீவியம்.

109. ஏரோது செத்தபின்பு ஏகோவா வின்தூதன்
சீரான யோசேப்பின் சொப்பனத்திற் றோன்றியன்று
பாராய்நீ யோசேப்பே, பாலனையு மதன்றாயும்
நேரான இஸ்ரவேல் நாட்டிற்குக் கொண்டுசெல்வாய்.

110. பாலகனைக் கொல்லவெண்ணும் படுபாவி ஏரோது
காலகதி யானானின்று கடவுளுட கிருபையாலே

சீலமன ஜனமதற்குள் சிறந்தபணி செய்யவிந்த
பாலகனைக் கொண்டுபோவாய் பயப்படாதே யென்றான் தூதன்.

111. தூதனுட மொழிகேட்டு துடித்தெழுந்து யோசேப்பு
ஆதரவா யிருக்குமந்த அம்மையுடன் பாலனையும்
சேதமெது மாகாமல் சிறுவாக னத்திலேற்றி
வேதனுட தேசத்திற்கு விரைந்திட்டா ரன்றுதானே.

112. யூதேயா நாட்டில்வந்து இருக்கலா மென்றுவெண்ண
பாதகன் அர்கலாயு பட்டத்தி லிருக்கக்கண்டு
வேதனுஞ் சொப்பனத்தில் வெகுவாக எச்சரிக்க
காதரந் தீரவந்த கலிலேயா நாடுசென்றான்.

113. கலிலேயா நாட்டிலிந்தக் கன்னிமுன் வசித்துவந்த
நலியாதப் பேரைப்பெற்ற நாசரேத் தூரிற்சென்று
பலியாகும் பாலன்றன்னைப் பத்திரமாய் வளர்க்க
சலியாமற் சென்றானையா சதியோடு யோசேப்பு.

114. புறஜாதி நாடாமிந்தப் பெருகலி லேயாவுக்கு
கருயிருள் நீக்கவந்தான் கர்த்தனின் சுதனுமேசு
திருவருள் தீர்க்கன்சொற்போல் திருமக னேசுயிப்போ
அருநச ரேயனென்று அழைத்திட லானனையா.

115. பிள்ளை மிகவளர்ந்து, புகழாவிப் பலங்கொண்டு
சொல்லில் லருஞான சிறப்படைந்து பாமுவக்க
நல்ல மனிதருட நலம்பெற்றார் நாசரேத்தில்
வல்ல குணத்தவராய் வளர்ந்திட்டார் நாளடைவில்.

116. தந்தை யவரோடு தச்சனாய் உழைத்திட்டார்
அந்தத் தாயோடு அகத்திருந்து துணைசெய்தார்
சொந்த ஆலயத்தில் திருமறையைக் கற்றுவந்தார்
சிந்தைப் பாமதிலே தினஞ்செல்ல தனித்திருந்தார்.

15. இயேசு பாலனின் ஆலய பக்தி.

117. பக்தியுள யோசேப்பும் பரிசுத்த மரியாளும்
நித்தமவர் இல்லத்தில் நிமலனைத் தியானிப்பார்
அத்தனுட தினமதிலே அவ்வூரின் ஆலயத்தில்
மெத்தவாய் தொழுதிடவே மிகவாகச் சென்றிடுவார்.

118. வருஷந் தவறாமல் வானோனின் பஸ்காவில்
எருசலேம் நகர்செல்வார் எகோவா வைத்தொழவே
பெருபயணஞ் செய்தவர் புகழ்பாலன் அவரோடு
திருநாள் கொண்டாடச் செல்வாராம் நன்றாக.

119. பாலனு மேசுவுக்கு பன்னிரு வயதாக
சாலவே பஸ்காவைச் சிறப்பாகக் கொண்டாட

பாலன் அவரோடு பதியெரு சலேசென்றூர்
சீல யோசேப்பும் சிறப்பான மரியாளும்.

120. நாசரேத் தனைவிட்டு நடந்திட்டார் தென்திசையாய்
தேசங்கள் கலிலேயா சமாரியா கடந்திட்டு
மாசில்லா யூதேயா மலேநாட்டை யடைந்திங்கு
ஈசனின் நகரென்னும் எருசலேம் சேர்ந்திட்டார்.

121. பலியிட்டார் பஸ்காவைப் பரனுடைய ஆலயத்தில்
வெளியிட்டார் தங்கவலே விமலனுட சன்னிதியில்
அழியாத வரம்பலது அவர்பெறவே செபித்திட்டார்
தொலேயிருந்து வந்திட்ட தூயயிக் குடும்பத்தார்.

122. பாலன் எசுவையும் பக்தியாய்ச் சேர்த்திட்டார்
சால சாஸ்திரிகள் சன்னிதியில் கொண்டுமிட்டார்
சீல மறையதனேச் சிறப்பாகக் கற்றிடவே
வேலே பலசெய்தார் விமலகுண குடும்பத்தார்.

123. பண்டிகை முடிந்ததவர் பயணப் படும்போது
ஒண்டியாய் இருந்திட்டார் வுயர்பாலன் எசுவங்கு,
நன்றான தாய்தந்தை நினேயாதப் பிரகாரம்
மன்றத்தில் இருந்துவிட்டார் மகத்துவ பாலகனும்.

124. ஒருநாள் வழிநடந்தார் உயர்பாலன் இல்லாமல்,
மறுநாள்ப் பாலகனே மனத்துயராய்த் தேடிட்டார்
அருபயணக் கூட்டத்தில் அப்பாலன் காணுமல்
திருநகர் எருசலேக்குத் திரும்பிட்டார் பெற்ருேரும்.

125. மனதுயர் கொண்டந்த மரியாளுங் கலங்கிட்டாள்
அனேவரையும் மீட்டிடவே அற்புதமாய் உதித்தயெந்தன்
குணப்பாலன் இழக்கநான் குற்றமெது செய்தேனே
கணப்பொழுது நீங்காத கனகமல்லோ என்றழுதாள்.

126. எருசலேம் நகர்வீதி எங்குமவர் காணுமல்
பரனுடைய ஆலயத்தில் பார்த்திடவே வந்திட்டார்
திருமறையைக் கற்பிக்கும் சிறப்பான சங்கத்தில்
அருபாலனேக் கண்டார் அன்பான பெற்ருேர்கள்.

127. அணேத்திட்டாள் தாய்மரியாள் அப்பால னேசுவையே
எனப்பா இவ்விதமாய் எங்களுக்குச் செய்திட்டாய்
நானும் மிககலங்க நற்தந்தை தான்கலங்க
வேணுமோ வுந்தனுக்காய் விமலகுண பாலகனே!

128. பலவிடம் அலேந்திட்டோம் பாடு மிகப்பட்டோம்
திலகம்போல் மகனுன்னேத் தேடி நாங்களென்று

நலமான தெய்வத்தை நாடும் பக்தரிகம்
பலபாடு எற்பதையே பக்தினி பறைந்திட்டாள்.

129. ஏசுபாலன் இதுகேட்டு இரங்கிச் சொல்லுகின்றான்
பாசமான பெற்றோரே புவியிலுள மானிடரே!
நேசமாக என்னைநீர் நினைத்திட்டீர் ஆனாலும்
வாசமாக நானிருக்கும் வல்லகத்தை அறியவில்லை.

130. எந்தந்தை பராபரனே இருக்கின்றே னவனகத்தில்
பங்கமான இடங்களிலே பரன்சுதனைக் காண்பீரோ!
எந்தந்தை கருமங்கள் இயற்றிடவே இகம்வந்தேன்
உங்களுக்கு இதைப்புகட்ட வழிசெய்தே னென்றானும்.

131. பன்னிரு வயதுவுள பாலியனாய் இயேசுபரன்
உன்னதப் பராபரனில் உத்தம பக்திகொண்டார்
தன்னய இகசுகத்தை தாய்தந்தைப் பற்றதனை
எண்ணாமல் இறைவனுட இல்லத்தைத் தெரிந்திட்டார்

பால்ய காண்டம் முற்றிற்று.

தேவாலயச் சிறப்பு.

இராகம். இங்லீஸ். பல்லவி. ஆதிதாளம்.

ஆலயமே தேவாலயமே—ஞா
னாமிர்தம் பொழியும் ஆலயமே.

அ-ப.—பாலர் வாலர் பெரியோர் சிறியோர்
பலரொன்றாய் ஆராதனை புரியும்—ஆலயமே.

சா. (1) பக்திகள் வருகும் புத்தியில் பெருகும்
சத்திய வேத வுத்தியில் உயரும்
நித்திய கருமம் சித்திய தாகும்
நிதமுன் னடிகாத் திருப்பேன் இருப்பேன்—ஆலயமே.

(2) பரமனின் அருளும் கிருபையும் தங்கும்
பலமனுடர் சிநேகம் இணங்கும்
நெறி தவறாதால் அலகை ஒதுங்கும்
நிதமுன் னடிகாத் திருப்பேன் இருப்பேன்—ஆலயமே.

(3) காலையிற் செல்வேன் கவலையைச் சொல்வேன்
கன சோதனை வந்தாலும் வெல்வேன்
மாலையுன் அகமே ஒதுங்கிக் கொள்வேன்
மணியின் அடிகாத் திருப்பேன் இருப்பேன்—ஆலயமே.

(4) ஆத்ம சரீர நன்மையின் கேணி
அல்லலுக்கு இடவோர் ஏணி
நேர்த்தியதான ஞானவின் தோணி
நிதமுன் னடிகாத் திருப்பேன் இருப்பேன்—ஆலயமே.

220867

Copies can be had from the AUTHOR

OR

Rev. P. I. ABRAHAM,

C. M. S. Settlement Church,

Washermanpet,

MADRAS

Ananda Bodhini Press, Madras.